வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 00738 /ஆ4 /2022, நாள் : 28.03.2022

பொருள்: தேர்வுகள் – மே 2022 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் – பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியலை பதிவிறக்கம் செய்ய தெரிவித்தல் – சார்பு.

பார்வை : சென்னை– 6. அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.019373/ /எப்1/2021, நாள்: 19.01.2022, 02.02.2022, 16.03.2022 மற்றும் 25.03.2022.

#######

பார்வையில் காணும் கடிதங்களின்படி மே 2022–ல் நடைபெறவுள்ள மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணவர்களின் G.R (Generated Register Number) எண்ணுடன் கூடிய பெயர்ப்பட்டியலை அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களும் 18.03.2022 முதல் – 23.03.2022 வரையிலான நாட்களில் அரசுத் தேர்வுகள் இணையதளத்திற்கு (www.dge.tn.gov.in) சென்று பதிவிறக்கம் செய்து கொள்வதற்கும், அப்பெயர்ப்பட்டியலில் திருத்தங்கள் இருப்பின் அதனை 19.03.2022 முதல் 23.03.2022 வரையிலான நாட்களில் பள்ளித் தலைமையாசிரியர்கள் மேற்கொள்ள வாய்ப்புகள் வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் தயாரிக்கப்பட்ட மே–22 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கான பள்ளி மாணவர்களின் தேர்வெண்ணுடன் கூடிய பெயர்ப்பட்டியலை, அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களும் 26.03.2022 முதல் 09.04.2022 வரையிலான நாட்களில் அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளமான www.dge.tn.gov.in–க்கு சென்று தங்கள் பள்ளிகளுக்கென வழங்கப்பட்டுள்ள USSER ID மற்றும் Password–ஐ பயன்படுத்தி பதிவிறக்கம் செய்து கொள்ள அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்விற்கான பள்ளி மாணவர்களின் விவரங்கள் அடங்கிய Excel Format–ல் உள்ள பெயர்ப்பட்டியலினை (Nominal Roll) சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும்

(PTO)

சார்ந்த அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்திலும் 28.03.2022 முதல் 09.04.2022 வரையிலான நாட்களில் தங்களுக்கென வழங்கப்பட்டுள்ள USSER ID மற்றும் Password-ஐ பயன்படுத்தி பதிவிறக்கம் (Download) செய்துகொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

ஒம்.க.(முனுசாமி)XXXXX
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் :

அனைத்து வகை தலைமை ஆசிரியர்கள் (மேல்நிலை)
வேலூர் மாவட்டம்.

நகல்–

1. அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர், வேலூர்,
   (தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது)
2. மாவட்ட கல்வி அலுவலர்
   வேலூர்.
   (தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டும்)

//ப.த.//